# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செவ்வாய்க்கிழமை 05.04.2022 supeedsam.com supeedsam@gmail.com




# கட்டுப்படுத்த முடியாதளவு கொழும்பில் போராட்டங்கள் தீவிரம்

## ஜனாதிபதி செயலகத்தை முற்றுகையிட எத்தனிக்கும் போராட்டக்காரர்கள்







பொருளாதார நெருக்கடிக்கு எதிர்ப்பு தெரிவித்தும் கோத்தபாய அரசாங்கத்தை பதவி விலகுமாறு வலியுறுத்தியும் நாடுமுழுவதும் பல்வேறு ஆர்ப்பாட்டங்களும் பாரிய போராட்டங்களும் நடைபெற்றுவருகின்றது.

போராட்டங்களில் ஈடுபட்டவர்கள் ஜனாதிபதி உட்பட ராஜபக்சக்கள் கூண்டோடு பதவி விலக வேண்டும் என கோஷங்களை எழுப்பினர்.

02 ஆம் பக்கத்தில்...

## 113 எம்.பிக்களுடன் வந்தால் அரசாங்கத்தினை கையளிக்க தயார்



113 நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பெரும்பான்மையை நிரூபிப்பவர்களுக்கு அரசாங்கத்தை கையளிக்க தயார் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இந்த விடயத்தினை தெரிவித்துள்ளார்.

நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஆளுங்கட்சி உறுப்பினர்களின் சந்திப்பின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மஹிந்தவின் இல்லத்திற்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டவர்களை கலைப்பதற்கு பொலிஸார் கண்ணீர்புகை, நீர்தாரை பிரயோகம்!



தங்காலையிலுள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் கார்ல்டன் இல்லத்திற்கு முன்பாக இடம்பெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை கலைப்பதற்கு

02 ஆம் பக்கத்தில்...

## நான்கு அமைச்சர்கள் மட்டும் நியமனம்

முழு அமைச்சரவையொன்று நியமிக்கப்படும் வரை நாடாளுமன்றம் மற்றும் நாட்டின் ஏனைய செயற்பாடுகளை சட்டபூர்வமாகவும் நிலையானதுமாக முன்னெடுக்கவே நான்கு அமைச்சர்களை அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ச இன்று நியமித்தார் என அரச தலைவர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

02 ஆம் பக்கத்தில்...

## சிறிய போராட்டங்களுக்காக ஜனாதிபதி பதவி விலக வேண்டிய அவசியம் இல்லை

இலங்கையில் உள்ள 6.9 மில்லியன் மக்களின் ஆதரவு இன்னும் இருப்பதால், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டிய அவசியம் இல்லை என நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தனது இராஜினாமாவை சமர்ப்பிக்க வேண்டிய அவசியமில்லை என தெரிவித்த அமைச்சர், மக்கள் ஆணையை ஜனாதிபதி இன்னும் வைத்திருப்பதாக

02 ஆம் பக்கத்தில்...

## கெஹலிய, காமினி வீடுகளின் முன் பதற்றம்



பாராளுமன்ற உறுப்பினர் காமினி லொகுகேவின் வீட்டின் முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் மீது பொலிஸார் கண்ணீர்ப்புகைத் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, பாராளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல்லவின் கண்டி இல்லத்திற்கு அருகில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது கண்ணீர் புகை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆர்ப்பாட்டக்காரர்களை கலைக்க பொலிஸாரால் இவ்வாறு கண்ணீர்ப்புகை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

02 ஆம் பக்கத்தில்...

## இன்று பாராளுமன்றத்தில் 2/3 ஐ அரசாங்கம் இழக்கும் ஆபத்து

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்களில் 50இக்கும் மேற்பட்டவர்கள் நேற்று (05) பாராளுமன்ற அமர்வு முதல் சுயாதீனமாகச் செயற்பட தயாராகி வருவதாக முன்னாள் இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா தெரிவித்துள்ளார்.

இவர்கள் அனைவரும் நாளையப் பாராளுமன்ற அமர்வில் இது தொடர்பில் அறிவிப்புக்களை விடுக்க உள்ளதாகவும், இதனால் அரசாங்கத்தின் மூன்றிலிரண்டு பெரும்பான்மை இழக்கப்படும் எனவும் தெரிவித்தார்.







## அரசாங்கத்தில் இருந்து விலகிய சுதந்திர கட்சி

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்திலிருந்து விலகத் தீர்மானித்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

அதன்படி ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 14 உறுப்பினர்களும் நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படத் தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் 11 பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கும் அரச தலைவர் கோட்டாபய ராஜபக்சவுக்கும் இடையிலான சந்திப்பு, நேற்று பிற்பகல் 3 மணிக்கு இடம்பெற்றது.

மேலும், கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றத்தில் இன்று (05) விசேட அறிக்கையொன்றை வெளியிடவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிள்ளையானின் கட்சி அலுவலகத்தினை முற்றுகையிட்ட சாணக்கியன் உள்ளிட்ட தரப்பினர்; போலிஸார் குவிக்கப்பட்டனர்!








மட்டக்களப்பிலுள்ள தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைமை காரியாலயம் ஆர்ப்பாட்டக்காரர்களினால் முற்றுகையிடப்பட்டதனால் அப்பகுதியில் பதற்றமான நிலையேற்பட்டது.

அத்தியாவசிய பொருட்களுக்கான விலை அதிகரிப்பு மற்றும் பொருளாதார நெருக்கடிகளை கண்டித்தும்அரசாங்கத்தினை பதவி விலகுமாறு கோரியும் நாடளாவிய ரீதியில் பல்வேறு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தநிலையில் நேற்று திங்கட்கிழமை மாலை மட்டக்கள்பபு கல்லடி பாலத்திலிருந்து தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பெருமளவானோர் கலந்துகொண்டு அரசாங்கத்திற்கு எதிராக கோஷமெழுப்பியிருந்தனர்.

மட்டக்களப்பு கல்லடி பாலத்தில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தினை தொடர்ந்து அங்கிருந்து ஊர்வலமாக திருகோணலை வீதியுடாக மட்டக்களப்பு நகர் வரையில் பேரணி முன்னெடுக்கப்பட்டது. இந்த பேரணியில் பெருளவான இளைஞர்கள் கலந்துகொண்டனர்.

இந்த பேரணி காரணமாக போக்குவரத்து நீண்டநேரம் பாதிக்கப்பட்டிருந்ததுடன் நகருக்குள் வந்த பேரணியானது வாவிக்கரை வீதியுடாக தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைமை காரியாலயம் வரையில் சென்று காரியாலயத்திற்கு முன்பாக கோசங்கள் எழுப்பப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் இன்றைய நிலையினை உணர்ந்து மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவர் பதவியை இராஜினாமா செய்து அரசாங்கத்திற்கு வழங்கிவரும் ஆதரவினை விலக்கிக் கொள்ளவேண்டும் என கோசங்கள் எழுப்பப்பட்டன.

ஊர்வலமானது தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைமை காரியாலயம் நோக்கி செல்லும் நிலையில் காரியாலயத்திற்கு முன்பாக பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டிருந்தது.

# பல்கலைக்கழக மாணவர்கள் தாக்கப்பட்டமைக்கு எதிராக திருமலையில் தீப்பந்தம் ஏற்றி ஆர்ப்பாட்டம்

(ரவ்பீக் பாயிஸ் )

திருகோணமலை பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள பல்கலைக்கழக மாணவர்கள் தீப்பந்தம் ஏற்றி ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டிருந்தனர்

திருகோணமலை கோணேசபுரி பிரதேசத்தில் அமைந்துள்ள திருகோணமலை பல்கலைக்கழக வளாகத்திற்கு முன்பாக நேற்று (04) இரவு குறித்த தீப்பந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது

குறித்த ஆர்ப்பாட்டமானது நேற்றையதினம் பேராதனை பல்கலைக்கழக மாணவர்கள் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டிருந்த வேளையில் அவர்கள் தாக்கப்பட்டு கண்ணீர்புகை விசிரப்பட்டு தமது ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக விடாமல் பொலிசாரினால் தடுத்து நிறுத்தியமைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் நெருக்கடிகளை கண்டித்தும் குறித்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது



மேலும் அரசாங்கத்திடம் பதிலில்லை, கேஸ் விலை ரொக்கட் விலை மற்றும் பால்மா விலை உயர்ந்தது என்ற கோஷங்களை எழுப்பியவாறு எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்

இதேவேளை நாளை நாட்டில் காணப்படும் அசாதாரண சூழ்நிலை காரணமாக நாட்டு மக்கள் எதிர்கொள்ளும் அத்தியவசிய பொருட்கள்மீதானவிலைஉயர்வு, மற்றும்,பெட்ரோல்,டீசல் மற்றும் மண்ணெண்ணெய் தட்டுப்பாடு, எரிவாயு தட்டுப்பாடு,தொடர்ச்சியான மின்வெட்டு நீர்வெட்டு இதுபோன்ற பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வு காணும் முகமாகவும் சிறந்த ஜனநாயக அரசை மீள கட்டியமைக்கும் முகமாகவும் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் வந்தாறுமூலை கிழக்கு பல்கலைக்கழக வளாகத்தின் முன்பாக சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவக மாணவர் ஒன்றியம் மற்றும் கிழக்கு பல்கலைக்கழக கலை கலாசார பீட மாணவர் ஒன்றியம் இணைந்து ஏற்பாடு செய்யப்படும் கண்டன பேரணிக்கு பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறும் இதன்போது அழைப்பு விடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நான்கு அமைச்சர்கள் மட்டும் நியமனம்

அனைத்து அமைச்சர்களும் பதவி விலகிய நிலையில், நாடாளுமன்றம் மற்றும் வெளிவிவகார அமைச்சுக்கள் மற்றும் நிதியமைச்சகங்களின் செயற்பாடுகளுக்காக சபைத் தலைவர் மற்றும் அரசாங்க கொறடா ஒருவரை நியமிக்க வேண்டிய தேவை ஏற்பட்டதால் தான் இந்த அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நாட்டில் தற்போது நிலவும் நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கு தமது பங்களிப்பை வழங்குமாறு நாடாளுமன்றத்தில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளிடமும் அரச தலைவர் ஏற்கனவே கோரிக்கை விடுத்துள்ளார்.

இதன்படி, அனைத்து கட்சிகளுடனான கலந்துரையாடலின் பின்னர் நிரந்தர அமைச்சரவை நியமிக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாடு எதிர்நோக்கும் பொருளாதார சவாலை முறியடித்து நாட்டை ஸ்திரப்படுத்துவதற்கு அனைத்து மக்களின் ஆதரவையும் அரச தலைவர் கோருகிறார் என அரச தலைவர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இன்று அரச தலைவர் மாளிகையில் பதவிப் பிரமாணம் செய்துகொண்ட அமைச்சர்கள்,

01. கல்வி – திரு.தினேஷ் குணவர்தன (சபைத் தலைவர்)
02. வெளிநாட்டு அலுவல்கள் – ஜி.எல்.பீரிஸ்
03. நெடுஞ்சாலைகள் – தஜோன்ஸ்டன் பெர்னாண்டோ (அரசாங்க கொறடா)
04. நிதி அலி சப்ரி

## கெஹலிய, காமினி வீடுகளின் முன் பதற்றம்

பாராளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல்லவின் கண்டி இல்லத்திற்கு அருகில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது கண்ணீர் புகை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆர்ப்பாட்டக்காரர்களை கலைக்க பொலிஸாரால் இவ்வாறு கண்ணீர்ப்புகை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இதேபோல், நாட்டின் பல்வேறு பகுதிகளில் அமைந்துள்ள ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளுக்கு முன்னர் பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

# திருமலையில் இரவு வேளையில் வீதிக்கு இறங்கிய வைத்தியர்கள்




(ரவ்பீக் பாயிஸ் )

திருகோணமலையில் பொது வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர்கள் சிலர் அரசாங்கத்திற்கு எதிராக எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டிருந்தனர்

நேற்று இரவு திருகோணமலை காந்தி சிலை சுற்று வட்டத்திற்கு முன்பாக குறித்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது

குறித்த ஆர்ப்பாட்டத்தில் அரியர் அதிகம் எனக்கு அது ஏன் புரியவில்லை உனக்கு, போடா வீட்டுக்கு, எமது அழகிய நாடு எமக்கு வேண்டும் மற்றும் அமைச்சரவை மாற்றம் வெறும் நாடகமே என்ற பதாதைகளை ஏந்தியவாறு தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தியிருந்தனர் .

குறித்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட வைத்தியர் ஒருவர் ஊடகங்களுக்கு இவ்வாறு கருத்து தெரிவித்தார்

காலை முதல் வைத்தியசாலையில் பணியாற்றிவிட்டு இந்த இரவு வேளையில் நாங்கள் வீதிக்கு இறங்கி இருக்கின்றோம் வைத்திய தொழில் வேண்டாமென போய் விட்டது வைத்தியசாலையில் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி கொண்டிருக்கின்றோம் வரும் நோயாளிகளுக்கு தேவையான சரியான மருந்து வகைகள் இல்லை நோயாளிகளுக்கு வைத்தியம் செய்வதற்கான உரிய உபகரணங்கள் இல்லை இவ்வாறான பல சிக்கல்களுக்கு மத்தியில் எமது சேவையினை தொடர்ந்து முன்னெடுத்துச் சென்று கொண்டிருக்கின்றோம் .

இவ்வாறு இருக்கையில் மேலதிகமாக மின் துண்டிப்பு மின் துண்டிப்பு காரணமாக வைத்தியர்கள் நாங்கள் மட்டுமல்லாது நோயாளிகளும் பெரும் கஷ்டத்தை எதிர்நோக்குகின்றனர் என தெரிவித்தார்

மேலும் அமெரிக்க பிரஜையாக இருந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தனது குடியுரிமையை ரத்து செய்துவிட்டு இலங்கை நாட்டில் உழைப்பதற்காக வந்து நாட்டை கூறு போட்டு விற்பனை செய்யும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தயவுசெய்து பதவிகளை துறந்து மக்களை வாழ விடுமாறும் அல்லது இலங்கையில் வாழும் மக்களை வேறு நாடுகளுக்கு செல்ல யாவது அனுமதிக்க வேண்டும் எனவும் தயவு செய்து உங்களது நாடான அமெரிக்காவுக்கு சென்றுவிடுமாறும் இதன்போது கோரிக்கை விடுத்தனர்.

## சிறிய போராட்டங்களுக்காக ஜனாதிபதி பதவி...

தான் நம்புவதாக தெரிவித்தார்.

ஜனாதிபதிக்கு இன்னும் மக்களின் ஆதரவு உள்ளது என்பதை நிரூபிக்க தேர்தல் நடத்தப்பட வேண்டும் எனவும் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

தற்போது முன்னெடுக்கப்படும் பொதுப் போராட்டங்கள் சிறு போராட்டங்களே எனத் தெரிவித்த அமைச்சர், எனினும் மக்கள் நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளனர் என்பதை ஏற்றுக்கொள்கின்றேன் எனவும் தெரிவித்துள்ளார்.

## மஹிந்தவின் இல்லத்திற்கு முன்பாக...

பொலிஸார் கண்ணீர்புகை மற்றும் நீர்தாரை பிரயோகம் செய்துள்ளனர்.

அரசாங்கத்திற்கு எதிராக நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பொதுமக்கள் பாரியளவில் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்தநிலையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தனிப்பட்ட இல்லமான தங்காலையிலுள்ள கார்ல்டன் இல்லத்திற்கு முன்பாக தற்போது போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதன்போது போராட்டக்காரர்களை கலைப்பதற்காக பொலிஸார் கண்ணீர்புகை மற்றும் நீர்தாரை பிரயோகம் செய்துள்ளனர்.

இதன்காரணமாக குறித்த பகுதியில் தற்போது அமைதியின்மை ஏற்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றனர்.

## கட்டுப்படுத்த முடியாதளவு கொழும்பில்...

கொழும்பு காலிமுகத்திடலில் நேற்று பிற்பகல் முதல் ஒன்றுகூடிய ஆயிரக்கணக்கான இளைஞர் யுவதிகளால் இக்கோஷங்களை வலியுறுத்தி பாரிய எதிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. நேற்று இரவு வரை இந்தப் போராட்டம் நடைபெற்றது.

அதேபோன்று சுதந்திர சதுக்கத்திலும் பெருந்தொகையானோர் கூடி நேற்று இரவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இதேபோன்று நாடெங்கும் பெரும்பாலான இடங்களில் அரசுக்கு எதிராக போராட்டங்கள் கட்டுப்படுத்த முடியாதளவுக்குத் தீவிரமடைந்துள்ளன.



# நுவரெலியாவில் அரசாங்கத்திற்கு எதிராக எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்





(தலவாக்கலை பி.கேதீஸ்)

எரிபொருள், சமையல் எரிவாயு , பால் மா,மருந்து தட்டுபாடு மற்றும் உணவு பொருட்கள் இரசாயண உரம் விலை ஏற்றத்தை எதிர்த்து நுவரெலியா நகரில் நேற்று (4) திங்கட்கிழமை காலை10 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை மாபெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை நுவரெலியா நகரில் பொது மக்கள் நடத்தினார்கள்.

அரசாங்கத்திற்கு எதிராக நடத்தப்பட்ட இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் நுவரெலியா வாழ் பெருந்திரளான இளைஞர்களும் ஒரு சில பௌத்த மத குருமார்களும் கலந்துக் கொண்டனர்.

இந்த ஆர்ப்பாட்டம் ஊர்வலம் நகர வீதிகளில் வரும் பொழுது ஒரு சில நகர வர்த்தகர்கள் கடைகளை மூடி ஆதரவு வழங்கினார்கள்.இந்த ஆர்ப்பாட்டத்தால் பலமணி நேரம் வீதிகளில் வாகன நெரிசலும் ஏற்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோத்தபாய வீடு செல்லவும், கோத்தபாய திருடர், மஹிந்த திருடர், பசில் ராஜபக்ஸ திருடர், அரசாங்கத்தை விட்டு வீடு செல்லுங்கள் என்ற கோசங்கள் எழுப்பியதோடு அரசியல்வாதிகள் கலந்துக்கொள்ள வேண்டாம்.

என எச்சரிக்கையும் விடுத்தனர். நுவரெலியா பிரதான தாபாலகத்திற்கு அருகில் ஒன்று சேர்ந்த பொது மக்கள் நுவரெலியா எலிசபெத் வீதி, லோசன் வீதி,கண்டி வீதி, சந்தன லால் கருணாரட்ன வீதி, பழையக் கடை வீதி,புதியகடை வீதி, பிரதான பஸ் தரிப்பு நிலையம்,வெளிமட வீதி, தர்மபால சந்தியில் திரும்பி மீண்டும் பிரதான தபாலாகத்திற்க்கு அருகில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதன் போது நுவரெலியாவிலுள்ள ஜனாதிபதி மாளிகை பிரதமர் இல்லத்திற்கு செல்லும் பாதைகளில் வீதி தடைகள் நுவரெலியா பொலிஸார் ஏற்படுத்தி அவ்வீதிகளில் ஆர்ப்பாட்டக்காரர்கள் செல்லவிடாமல் தடைகளை ஏற்பத்திருந்தனர்.




# கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பட்ட பேரணி









(செங்கலடி நிருபர்)

அரசின் பொருளாதார கொள்கைக்கு எதிராகவும் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணுமாறு கோரியும் கிழக்குப் பல்கலைக் கழக மாணவர்கள் நேற்று திங்கட்கிழமை (04) காலை ஆர்ப்பாட்ட பேரணியில் ஈடுபட்டனர்.

கிழக்கு பல்கலைக் கழக வந்தாறுமூலை வளாகத்தின் தகவல் தொழில் நுட்ப மற்றும் விவசாய பீடம் அமைந்துள்ள தொகுதியின் நுழைவாயிலில் ஆரம்பமான மாணவர்களது ஆர்ப்பாட்ட பேரணி கொம்மாதுறை திருவள்ளுவர் வீதியூடாக சென்று மட்டக்களப்பு திருமலை வீதியில் அமைந்துள்ள வந்தாறுமூலை பிரதான வளாகம் வரை முன்னெடுக்கப்பட்டது.

பிரதான வீதியில் ஒன்று கூடிய மாணவர்கள் தமது கோரிக்கைகள் அடங்கிய பதாதைகளை ஏந்தியவண்ணம் கோரசங்களையெழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

உணவு இல்லை, எண்ணெய் இல்லை, மின்சாரம் இல்லை, கேஸ் இல்லை, பொருள் விலை, வரிச்சுமைகளை குறையுங்கள், மக்களுக்கு நிவாரணம் வழங்குங்கள் போன்ற கோசங்களையெழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# அரசு பதவி விலகி, சிறந்த ஆட்சியை உருவாக்க வழிவிட வேண்டும்



நாட்டு மக்களை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டு, அவர்களை நிம்மதியாக வாழ வைக்க வேண்டிய பொறுப்பு இந்த அரசாங்கத்துக்கு உள்ளது. இந்த தார்மீக பொறுப்பிலிருந்து அரசாங்கம் ஒருபோதும் தப்பித்துக்கொள்ள முடியாதென மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

வவுனியா சாளம்பைக்குளத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர்,

இந்த நாட்டில் வாழுகின்ற மக்கள் பசியாலும் பட்டினியாலும் பொருளாதார நெருக்கடிகளினாலும் இன்று வீதிக்கு இறங்கி போராடிக்கொண்டிருக்கின்றனர். எம்மை வாழ விடுங்கள், எமது பிள்ளைகளை வாழ விடுங்கள் என்ற கோஷமே எங்கு பார்த்தாலும் ஒலிக்கின்றது. மக்கள் உண்ண உணவின்றி, வாழ்வதற்கு வழியில்லாமல், வேதனையின் விளிம்பில் இருப்பதனாலேயே, நாடு முழுவதிலும் ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்கின்றனர். அவ்வாறான மக்களின் மீது தங்களுடைய அதிகாரத்தை பிரயோகித்து, அடக்கி, அச்சுறுத்தி, சிறைப்படுத்தி இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது.

இந்த ஆட்சியாளர்கள் ஆட்சிபீடத்தில் ஏறிய நாள் தொடக்கம், கடந்த இரு வருடங்களாக இனவாதத்தையும் மதவாதத்தையும் விதைத்து, இந்த நாட்டைக் குட்டிச்சுவராக்கிவிட்டனர். இன்று அவர்களுக்கு வாக்களித்த 69 இலட்சம் மக்களும் கூட அரசுக்கு எதிராக வீதியில் இறங்கியுள்ளனர். இந்த நிலையில் அரசாங்கம் உடனடியாக தங்களுடைய பதவியிலிருந்து விலகி, நாட்டு மக்கள் விரும்புகின்ற, நாட்டுக்கு நல்லது செய்யக் கூடிய ஒரு ஆட்சியை உருவாக்குவதற்கு வழிவகுக்க வேண்டும். ஜனாதிபதியும் ஆட்சியாளர்களும் அமைச்சர்களும் ஒன்றிணைந்து விட்டுக்கொடுப்பு செய்வதன் ஊடாக மட்டும்தான் ஒரு தீர்வைக் காண முடியும். இவர்களால் இந்த நாட்டை கொண்டு நடாத்த முடியாது என்பதை கடந்த இரு வருடங்களில் நிரூபித்துவிட்டனர். இவர்களால் இந்த நாடு தொடர்ந்தும் அதலபாதாளத்தில் வீழ்ந்துகொண்டிருக்கிறது.

எனவே, நாட்டு மக்களின் உணர்வுகளை மதித்து, நாட்டின் நலனைக் கருத்திற்கொண்டு, இன, மத பேதங்களுக்கு அப்பால் ஒன்றுபட்டு, மக்கள் விடுக்கின்ற கோரிக்கைகளுக்கு ஆட்சியாளர்கள் செவிசாய்க்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுக்கின்றோம் என்று கூறினார்.

# புதிய விளையாட்டு மைதானம் அங்குரார்ப்பணம்



( ஹஸ்பர் )

திருகோணமலை, தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கல்மெடியாவ வடக்கு கிராம சேவகர் பிரிவில் புதிய விளையாட்டு மைதானம் அபிவிருத்திக்கான அங்குரார்ப்பண வைபவம் இடம் பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி குறித்த மைதான அபிவிருத்திக்காக நேற்று (04)அங்குரார்ப்பணம் செய்து வைத்தார். தம்பலகாமம் பிரதேச சபை தவிசாளர் ஏ.ஜீ.சம்பிக்க பண்டார அவர்களின் பங்கேற்புடன் மைதானம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. இளைஞர்களின் விளையாட்டு திறன்களை மேம்படுத்தும் நோக்கிலும் இம் மைதானம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

இதில் பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப், பிரதேச சபை உறுப்பினர் வஜிர மற்றும் உத்தியோகத்தர்கள், இளைஞர் யுவதிகள் என பலர் கலந்து கொண்டனர்.

# சமாதான ஊடக அமைப்பினால் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன அறிவிப்பாளர்கள் மூவருக்கு ஏ.ஆர்.எம்.ஜிப்ரி ஞாபகார்த்த ஊடக விருது





( எம்.எம்.ஜெஸ்மின்)

ஸ்ரீலங்கா சமாதான கற்கை நிறுவனம் ஒழுங்கு செய்திருந்த சர்வதேச கல்விச்சுற்றுலா ஆய்வு மகாநாடு கொழும்பு பண்டாரநாயக சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது இலங்கை சமாதான ஊடக அமைப்பினால் இலங்கை ரூபவாஹினி நிகழ்ச்சித் தயாரிப்பாளர் எம்.எஸ்.எம்.இர்பான், இலங்கை ரூபவாஹினி செய்தி வாசிப்பாளர் இர்ஸாத் ஏ காதர் , பிறை எப்.எம். கட்டுப்பாட்டாளர் பஸீர் அப்துல் கையும் ஆகியோருக்கு காலஞ்சென்ற அறிவிப்பாளர் ஏ.ஆர்.எம்.ஜிப்ரி அவர்களின் ஞாபகார்த்தமாக இலங்கை சமாதான ஊடக அமைப்பின் தலைவர் எம்.எம்.ஜெஸ்மின் தலைமையில் ஊடக விருது வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் சமாதான ஊடக அமைப்பின் தலைவர் பேராசிரியர் கலாநிதி எஸ்.எல்.றியாஸ் , சமாதான ஊடக அமைப்பின் தவிசாளர் சமீர் யுனூஸ், முன்னாள் அமைச்சர் அலிசாக்கிர் மௌலானா , திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எம்.முஸர்ரப் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மன்னார் மறைமாவட்ட ஆயர் அமரர் இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் முதலாம் ஆண்டு நினைவு பேருரை





(வாஸ் கூஞ்ஞ)

ஒடுக்கப்பட்ட இனத்தின் உரிமைக்குரலாய் பல சவால்களுக்கு மத்தியிலும் இன மானவுணர்வுடன் இன விடுதலைக்காய் அறப்பணி புரிந்த முன்னாள் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு அமரர் இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் ஓராண்டு நினைவேந்தலை முன்னிட்டு ஆண்டகையின் நினைவு பேருரை மன்னாரில் இடம்பெற்றது.

தமிழ்த்தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் இதன் தலைவர் வீ.எஸ்.சிவகரனின் தலைமையில் மன்னார் நகர சபை மண்டபத்தில் சனிக்கிழமை (02.04.2022) மாலை 3.30 மணியளவில் நடைபெற்றது

இவ் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக மட்டக்களப்பு திருமலை மறைமாவட்ட ஓய்வுநிலை ஆயர் பேரருட் கலாநிதி கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகையுடன் யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி ப.யோ.ஜெபரட்ணம் அடிகளார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

விழா ஆரம்பத்தில் ஆயர் மேதகு கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகையால் மறைந்த ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் திருஉருவத்துக்கு முன் குத்துவிளக்கேற்ற யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி ப.யோ. ஜெபரட்ணம் அடிகளார் மாலை அணிவித்ததைத் தொடர்ந்து கலந்து கொண்டோர் யாவரும் மறைந்த ஆயரின் திருஉருவப்படத்துக்கு மலர்கள் தூவி அஞ்சலி செலுத்தினர்.

இவ் நிகழ்வில் அரங்க அறிமுக உரையினை தாழ்வுபாடு பங்கு தந்தையும் மனித உரிமை தொடர்பாக செயல்படும் அருட்பணி எஸ்.ஜெயபாலன் குரூஸ் அடிகளார் வழங்கியதுடன்

தமிழ்த்தேசிய இருப்பில் அமரர் ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் வகிப்பாகம் என்னும் தலைப்பில் யாழ் பல்கலைக்கழக அரசறிவியல் துறை பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம் உரையாற்றினார்.

அத்துடன் இவ் நிகழ்வில்; ஆறு அண்டுகளாக சிறைவாசம் கொண்டு மறைந்த ஆயரின் தயவால் விடுதலையாகி இன்று குரலற்ற மனிதர்களின் குரலாக செயற்பட்டுக் கொண்டிருக்கும் ஒருங்கிணைப்பாளர் மு.கோமகன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுணீவாஜிலிங்கம், வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், அருட்பணி விக்ரர் சோசை அடிகளார், பிரதம அதிதிகள் ஆகியோர் உரையாற்றினர்.

அத்துடன் யாழ் பல்கலைக்கழகம் அரசறிவியல் துறை தலைவர் பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம் அவர்களால் ஆக்கம் செய்யப்பட்ட 'தமிழ்த்தேசிய இருப்பில் இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் வகிபாகம்' என்ற நூல் ஆயர் கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகையால் மறைந்த ஆயர் யோசேப்பு ஆண்டகையின் உறவினரான அருட்சகோதரியிடம் கையளிக்கப்பட்ட நிகழ்வுகளும் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

# பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் 103 வது ஆண்டு நிறைவு விழா



(அஸ்ஹர் இப்றாஹிம்)

பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை களுவாஞ்சிக்குடியின் 103 வது ஆண்டு நிறைவு விழா கடந்த ஏப்ரல் முதலாம் திகதி அனுஸ்டிக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் எம்.சபேஸ்குமார் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் கணித பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் சி.கிருஸ்ணபிள்ளை சிறப்பு அதிதியாக கலந்து கொண்டார். இந்நிகழ்வில் பாடசாலை பிரதி அதிபர் த.ஜனேந்திரராஜா , உப அதிபர்களான வீ.ரவீந்திரமூர்த்தி , எம்.ரவிச்சந்திரன் , ஏ.கலாபராஜன் ,பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் வ.கண்ணன் , பகுதித்தலைவர்கள் , ஆசிரியர்கள் , மாணவர்கள் , கல்விசாரா உத்தியோஸ்தர்கள் பங்கேற்றனர்.

இதன்போது 103 வருட நினைவாக கேக் வெட்டப்பட்டு அனைவருக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது.



# கிழக்கு மாகாணத்தை மையப்படுத்தி காத்தான்குடி மண்ணிலிருந்து வெளிவரும் 'வாரவலம்' பத்திரிகையின் அறிமுக விழா!!





(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

கிழக்கு மாகாணத்தை மையப்படுத்தி காத்தான்குடி மண்ணிலிருந்து வாராந்தம் வெளிவரவிருக்கும் வாராந்த பத்திரிகையான 'வாரவலம்' பத்திரிகையின் அறிமுக விழா அண்மையில் காத்தான்குடியில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாணத்தை மையப்படுத்தி வெளியாகும் பத்திரிகைகள் மிக அரிதாகவே காணப்படும் இச்சந்தர்ப்பத்தில் 'வாரவலம்'பத்திரிகையின் அறிமுக விழா காத்தான்குடி அல்மனார் அறிவியற் கல்லூரியின் கேட்போர்கூட மண்டபத்தில் வெகுவிமர்சையாக இடம் பெற்றது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தேசிய அமைப்பாளர்

மௌலவி அல்ஹாஜ் எஸ்.எம்.எம்.முஸ்தபா (ஜேபி) பலாஹி அவர்களது தலைமையில் இடம் பெற்ற பத்திரிகை அறிமுக விழாவிற்கு பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட செயலாளரும் மாவட்ட அரசாங்க அதிபருமாகிய கே.கருணாகரன் அவர்கள் கலந்து சிறப்பித்திருந்தார்.

இதன்போது 'வாரவலம்' பத்திரிகையின் முதற்பிரதி அரசாங்க அதிபரிற்கு வழங்கி வைக்கப்பட்டதனைத் தொடர்ந்து ஆன்மீக அதிதிகள் உள்ளிட்ட ஏனைய அதிதிகளுக்கு வழங்கி அறிமுகம் செய்துவைக்கப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு அம்பாறை மறைமாவட்ட ஆயர் கலாநிதி ஜோசப் பொன்னையா ஆண்டகை, மட்டக்களப்பு இராமகிருஷ்ன மிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத்.சுவாமி தக்ஷஜானந்தஜீ மஹராஜ் மற்றும் ஜாமியதுல் பலாஹ் அரபுக்கல்லூரியின் சிரேஸ்ட விரிவுரையாளர் மௌலவி அல்ஹாஜ் ஏ.ஜீ.ம்.அமீன் பலாஹி உள்ளிட்டோர் குறித்த நிகழ்விற்கு ஆன்மீக அதிதிகளாக கலந்து சிறப்பித்திருந்தனர்.

சூடு, சுவை, சுவாரஸ்யம் ஆகியவற்றை தன்னகத்தே சுமந்துவரவுள்ள ஜனரஞ்சக செய்தி இதழான 'வாரவலம்' பத்திரிகையின் பிரதம ஆசிரியராக சிரேஸ்ட ஊடகவியலாளர் கவிமாமணி ரீ.எல்.ஜௌபர்கான் பணியாற்றுவதுடன், இவர் இலத்திரனியல், அச்சு, இணையவளி மற்றும் சமூக ஊடகங்களின் பிராந்திய செய்தியாளராகவும், சர்வதேச ஊடகங்களிலும் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய செய்தியாளராக பணிபுரிகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மண்முனைப்பற்றின் ௨0௨௨ ஆம் ஆண்டிற்கான பிரதேச மட்ட விளையாட்டு விழா





(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மண்முனைப்பற்று பிரதேச செயலகமும் கிழக்கு மாகாண விளையாட்டு திணைக்களமும் இணைந்து நடாத்திய மண்முனைப்பற்றின் 2022 ஆம் ஆண்டிற்கான பிரதேசமட்ட விளையாட்டு விழா கடந்த வியாழக்கிழமை மிகவும் கோலாகலமாக இடம்பெற்றது.

மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி.சத்தியானந்தி நமசிவாயம் தலைமையில் புதுக்குடியிருப்பு கண்ணகி மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற பிரதேசமட்ட விளையாட்டு விழாவிற்கு பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. நவரூபரஞ்ஜனி முகுந்தன் கலந்துகொண்டு சிறப்பித்ததுடன், குறித்த நிகழ்விற்கு கௌரவ அதிதிகளாக மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் வே.ஈஸ்பரன் மண்முனைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி த.பிரபாசங்கர் மற்றும் மாவட்ட விளையாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் மு.ஏ.ஆதாம்லெவ்வை ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்திருந்தனர்.

குறித்த விளையாட்டு விழாவில் புள்ளிகளின் அடிப்படையில் சுடர் விளையாட்டு கழகம் 14 தங்கப்பதக்கங்களையும், 9 வெள்ளிப்பதக்கங்களையும், 8 வெண்கலப் பதக்கங்களையும் பெற்று முதலாம் இடத்தினையும், விஸ்வகலா விளையாட்டுக்கழகம் 12 தங்கப்பதக்கங்களையும் 7 வெள்ளிப் பதக்கங்களையும் 4 வெண்கலப் பதக்கங்களையும் பெற்று இரண்டாம் இடத்தினையும், 6 தங்கப்பதக்கங்களையும் 10 வெள்ளிப்பதக்கங்களையும் 12 வெண்கலப் பதக்கங்களையும் பெற்று டெல்பின் விளையாட்டு கழகம் மூன்றாம் இடத்தினையும் சுவீகரித்திருந்தது. இதன்போது அலுவலக உத்தியோகத்தர்களுக்கான போட்டி நிகழ்வுகள் இடம்பெற்றிருந்ததுடன், மெய்வல்லுனர் போட்டிகளில் வெற்றிபெற்ற ஆண் மற்றும் பெண் வீரர்களுக்கான சிறப்பு விருதுகளும் அதிதிகளினால் வழங்கி வைக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வுகளில் பிரதேச செயலகத்தின் உதவிப்பிரதேச செயலாளர் திருமதி.வி.லோகினி, பிரதேசசெயலக நிருவாக உத்தியோகத்தர் திவாகரன், விளையாட்டு உத்தியோகத்தர் உள்ளிட்ட பிரதேசசெயலக பதவிநிலை உத்யோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேசவிளையாட்டு கழகங்களின் வீரர்கள் அடங்கலாக கிராம மக்கள் என பெருமளவிலானோர் கலந்துகொண்டிருந்தனர்.

# கிழக்கு மாகாணத்திற்கு ௨௫ தாதிய உத்தியோகத்தர்களுக்கான இணைப்புக் கடிதங்கள் வழங்கி வைப்பு!





(பைஷல் இஸ்மாயில்)

நாம் மக்களுக்கு சேவை செய்வதற்காகவே நியமிக்கப்பட்டுள்ளோம். எமது சேவைகளை திறன்பட வழங்க வேண்டும். அதற்கான ஊதியங்களை அரசாங்கம் எமக்கு வழங்குகின்றது. அதற்கெற்றாப் போல் எமது கடமைகளைச் செய்யவேண்டும் என்று கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன் தெரிவித்தார்.

மத்திய சுகாதார அமைச்சினால் நியமனம் வழங்கி வைக்கப்பட்ட தாதிய உத்தியோகத்தர்களில் 25 பேர் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சுக்கு இணைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான இணைப்புக் கடிதத்தை வழங்கி வைக்கும் நிகழ்வு (04) கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது அவர் கூறுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அரச பதவி வகிப்பவர்கள் சுறுசுறுப்பாகவும் சேவை மனப்பாங்குடனும், நேர்த்தியாகவும், மக்களிடம் இன்முகத்துடனும் தங்களது வேலைகளை செய்கின்ற போதுதான் அத்தொழிலுக்கு மகிமையும், உயர்வும் கிடைக்கின்றது. அதுமாத்திரமல்லாமல் ஒரு நிறுவனத்தில் சேவைபுரிகின்ற அரச ஊழியர்கள் சிறந்த சேவை மனப்பாங்குடனும், சிறப்பாகவும் தமது சேவைகளை மக்களுக்காக வழங்கி வருகின்றபோதுதான் அந்த நிறுவனத்திற்கு வெற்றியும் உள்ளது. மக்கள் சேவையை பெறுவதற்காக வரும்போது சேவை வழங்குனர்களின் நடத்தையை அவதானித்து தங்கள் மனதிலே சேவை வழங்குனர் குறித்து பதித்துக் கொள்கின்றனர். அவ்வாறான மனப்பதிவுகள் சிறப்பாக இருக்கும் போதுதான் சேவையாளன் வழங்குகின்ற சேவையில் திருப்தி கொள்கின்றார்கள். அந்த நல்லொதொரு மனப்பதிப்புக்களை நாம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றார்.

இந்த நிகழ்வின்போது சுகாதார அமைச்சின் சிரேஷ்ட உதவிச்செயலாளர், திட்டமிடல் பணிப்பாளர் உள்ளிட்ட அமைச்சின் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

# வாழைச்சேனை பாடசாலையில் மைதான புனரமைப்பு

(ந.குகதர்சன்)

விளையாட்டுத்துறை அமைச்சின் ஊடாக நாடளாவிய ரீதியில் கிராமிய விளையாட்டு மைதானம் மற்றும் பாடசாலை விளையாட்டு மைதானம் புனரமைக்கும் வேலைத் திட்டங்கள் நேற்று திங்கட்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அந்த வகையில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவருமான நசீர் அஹமட்டின் முயற்சியினால் வாழைச்சேனை அந்நூர் தேசிய பாடசாலை விளையாட்டு மைதான புனரமைப்பு ஆரம்ப நிகழ்வு இன்று திங்கட்கிழமை இடம்பெற்றது.

வாழைச்சேனை அந்நூர் தேசிய பாடசாலை அதிபர் ஏ.எம்.தாஹிர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் எஸ்.எச்.முஸம்மில் பிரதி திட்ட பணிப்பாளர் எம்.ருவைத் பிரதேச சபை உறுப்பினர்களான எம்.பி.எம்.தையூப் எம்.இம்தியாஸ் பாராளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர் எம்.ஜவாத் பாடசாலை பிரதி அதிபர்கள் பாடசாலை சமூக மட்ட அமைப்புக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

விளையாட்டுத்துறை அமைச்சின் நிதி இரண்டு மில்லியன் நிதி ஒதுக்கீட்டின் கீழ் பாடசாலை விளையாட்டு மைதானம் புனரமைப்பு செய்யப்படவுள்ளதாக கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் எஸ்.எச்.முஸம்மில் தெரிவித்தார்.



# நாட்டின் இன்றைய நிலைக்கு 20 க்கு கை தூக்கியோரும் பொறுப்புக் கூற வேண்டும்

**(ஹஸ்பர்)**

ஜனாதிபதியின் தூர நோக்கற்ற செயற்பாடுகளாலேயே நாடு இன்று பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது. இதற்கு 20 ஆம் திருத்தத்திற்கு கை தூக்கிய அனைவரும் பொறுப்புக் கூற வேண்டும் என திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நேற்று (04) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அரசியலமைப்பின் 20 ஆம் திருத்தத்தின் மூலம் ஜனாதிபதியின் அதிகாரம் மேலும் அதிகரிக்கப்பட்டது. இந்த அதிகாரத்தினை அவர் தன்னிச்சையாகப் பயன்படுத்தியதாலேயே நாடு இன்றைய நிலைக்குத் தள்ளப்பட்டது.

எனவே, ஜனாதிபதிக்கு அதிகாரத்தைப் பெற்றுக் கொடுக்கும் இந்த 20 ஆம் திருத்தத்திற்கு ஆதரவு வழங்கிய அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களும் இதற்குப் பொறுப்புக் கூற வேண்டும். ஏனெனில் அவர்கள் வழங்கிய ஆதரவே ஜனாதிபதியின் செயற்பாடுகளுக்கு வலுச்சேர்த்தது.



ஜனாதிபதித்தேர்தல் தொடக்கம் பொதுத் தேர்தல் வரை பொதுஜன பெரமுனவோடு இணைந்து பணியாற்றியவர்கள் 20 ஆம் திருத்தத்திற்கு ஆதரவு வழங்கியமைக்கு ஏதோ ஒரு வகையில் காரணம் கூற முடியுமாக இருக்கும்.

எனினும், ஜனாதிபதித் தேர்தலிலும், பொதுத் தேர்தலிலும் எம்மோடு ஒன்றாக இருந்தவர்கள், தேர்தல் மேடைகளில் எம்மோடு சேர்ந்து ஜனாதிபதிக்கு எதிராக வசைபாடியவர்கள் பாராளுமன்றத்தில் கையில் 20 எதிர்ப்பு அடையாளத்தைப் பொறித்துக் கொண்டிருந்தவர்கள் ஜனாதிபதிக்கு வலுச்சேர்த்த 20 ஆம் திருத்தத்திற்கு திடீரென ஆதரவு வழங்கியமை தான் பெரிய ஆச்சரியமாக உள்ளது.

நேர்மையான சிந்தனை உள்ளவர்கள் இந்த செயலை இன்னும் வியப்போடு தான் பார்க்கின்றனர். குர்ஆன், ஹதீஸை முன்னிருத்தி தங்களை பலப்படுத்திக் கொண்ட கட்சியைச் சேர்ந்த இவர்கள் எதிர்க்கட்சியோடு ஒன்றாக இயங்கி அவர்களது நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருந்து பெரும் நம்பிக்கைத் துரோகத்தில் ஈடுபட்டமை மக்களிடையே பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளமை எமக்குத் தெரிகின்றது.

இவர்கள் திடீரென தடம் மாறியமைக்கு காரணம் என்ன, அரசோடு இவர்களுக்குள்ள டீல் என்ன என்பது குறித்தெல்லாம் பொதுமக்கள் நன்கு விளங்கி வைத்துள்ளார்கள். பொது மக்களை எப்போதும் உணர்ச்சி வசப்படுத்தி ஏமாற்ற முடியாது என்பதையே இது தெளிபடுத்துகின்றது.

எரிபொருளுக்கு வரிசை. எரிவாயுவுக்கு வரிசை. பால்மா பெற முடியாது. இரவுபகல் பாராது தொடர்ச்சியான மின்வெட்டு. வருமானம் அதிகரிக்காத நிலையில் பொருட்களின் விலை மூன்று மடங்கு அதிகரிப்பு இவைதான் இன்றைய நாட்டு நிலைமை. இதனால் பொதுமக்கள் எதிர்நோக்கும் அவலங்களும், பிரச்சினைகளும் சொல்ல முடியாது.

பொதுமக்களுக்கு இவ்வளவு சோகங்கள் இருந்தும் 20க்கு ஆதரவு வழங்கியோர் இன்று வாய்மூடி மௌனமாக இருக்கின்றனர். பொதுமக்களின் வாக்குகளினால் அதிகாரத்துக்கு வந்தவர்கள் பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து கொஞ்சமாவது கவனம் செலுத்த வேண்டும். குறைந்தது கருத்துக்களாவது சொல்ல வேண்டும். இவை எதுவுமில்லாத அளவுக்கு அவர்களது டீல் அவர்களைக் கட்டிப்போட்டுள்ளது. அவர்களை மௌனிக்கச் செய்துள்ளது .இவ்வாறு அவர் கூறினார்.

# தலவாக்கலையில் இளைஞர் ஒருவர் போராட்டம்




**(தலவாக்கலை பி.கேதீஸ்)**

அரசாங்கத்தின் பொருளாதார முறைகேடுகளால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் உடனடியாக பதவி விலகுமாறு கோரி இளைஞர் ஒருவர் தலவாக்கலை பிரதான சுற்றுவட்டத்தில் நேற்று (04) திங்கட்கிழமை போராட்டத்தை முன்னெடுத்தார்.

இதன்போது குறித்த இளைஞர்தனியாக சுவரொட்டி ஒன்றைக் ஏந்தியவாறு தலவாக்கலை சுற்று வட்டத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார். அதனைத் தொடர்ந்து அவ்விடத்திற்கு வந்த ஏனைய இளைஞர்களும் போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞனுக்கு ஆதரவாகச் சேர்ந்துகொண்டு போராட்டத்தில் ஈடுப்பட்டனர்.

# அரசுக்கு எதிராக மருத்துவர்களும் போதுமக்கள் மாபெரும் ஆர்ப்பாட்டம் கந்தளாயில்






**(எப்.முபாரக் )**

திருகோணமலை கந்தளாய் பிரதேச சபைக்குட்பட்ட கந்தளாய் நகரில் மாபெரும் ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றுள்ளது .

அதிகரித்தது வரும் விலைவாசியை கண்டித்து அரசுக்கு எதிராக நேற்று (04) வியாபார சங்கம் மக்கள் விடுதலை முன்னணி மருத்துவர்கள் மற்றும் பொதுமக்களும் இணைந்து நடத்தப்பட்டது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் கந்தளாய் பஸ் தரிப்பிடத்தில் இருந்து மணிக்கூட்டு கோபுர சந்தி வரை மறித்து சுமார் ஒரு மணி நேரம் கோஷங்களை எழுப்பியவாறு கந்தளாய் வைத்தியசாலை ஊழியர்கள், வைத்தியர்கள் மற்றும் தாதியர்களின் ஆதரவுடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பொதுமக்களும் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கியது குறிப்பிடத்தக்கது.

# சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஸம்ஸ் மகா வித்தியாலயத்தின் ஸ்தாபக அதிபர் மர்ஹூம் ஏ.ஸி.எம்.இப்றாஹிம் அவர்களின் 31 வது வருட நினைவு

**( எம்.எம்.ஜெஸ்மின்)**

மர்ஹூம் அப்துல்காதர் லெப்பை மரைக்காயர் தம்பதிகளின் ஐந்தாவது செல்வப் புதல்வனாக 1926. 9 .25 இல் மர்ஹூம் ஏ.ஸி.எம். இப்ஹாஹிம் அவர்கள் பிறந்தார்

.பாடசாலைக்கல்வியை சாய்ந்தமருது அல்ஹிலால் வித்தியாலயத்தில் பெற்று , 1944 ஆம் ஆண்டுசிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திர பரீட்சையில் சித்தியடைந்து , 1945 ஆம் ஆண்டு ஆசிரியர் கலாசாலையில் பிரவேசப் பரீட்சையில் தேறி , இரு வருட பயிற்சிபெற்று பயிற்றப்பட்ட ஒரு ஆசிரியராக வெளி வந்தார்.

1953ஆம் ஆண்டுசின்னமீராலெவ்வை யாசின்வாவா ( வெடிக்காரன்) தம்பதிகளின் ஏக புதல்வி கதீஜாவை தனது வாழ்க்கை துணைவியாக கரம்பிடித்தார்.முஹம்மது அஸ்றப்( ஓய்வுபெற்ற இலங்கை வங்கி முகாமையாளர்) ,முஹம்மது அஸ்ஹர் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) , முஹம்மது அஜ்வத்( புள்ளிவிபரவியல் திணைக்கள அதிகாரி ) ஆகிய 3 ஆண்களுக்கும் , மர்ஹூமா சித்தி பௌசியா , உம்மு றிபாயா , கன்சுல் நௌபியா ஆகிய பெண்களுக்கும் தந்தையானார்.

எல்லோரும் போற்றக்கூடிய ஓர் உயர்ந்த மனிதானக வாழ்ந்து 4 .4.. 1991 அன்று தனது வாழ்க்கை பயணத்தை முடித்துக் கொண்டார்.

தனது 19வது வயதில் ஆசிரியர் தொழிலில் அடி எடுத்து வைத்தார் அவர் ஆசிரியர் தொழிலை ஆரம்பித்த காலம் முஸ்லிம் ஆசிரியர்களுக்கு மிகவும் தட்டுப்பாடு இருந்த காலமாகும் . விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலர் மட்டுமே அந்தக் காலத்தில் சேவை செய்து கொண்டிருந்தனர்.முதலில் தனது ஆசிரிய சேவையை கஷ்டப்பிரதேசமான திருகோணமலை குறிஞ்சாக்கேணி அ.மு.க. வித்தியாலயத்தில் ஆரம்பித்தார்.அடுத்து கல்முனைக்குடி அல் அஸ்ஹர் வித்தியாலயத்தில் அதிபராக கடமையாற்றினார் . கல்விவளர்ச்சியில் அவர் காட்டிய ஆர்வம் இன்றும்கல்முனைக்குடி மக்களால் நினைவு கூரப்படுகின்றது.

தான் பிறந்தமண்ணிலேயே உள்ள குழந்தைகளுக்கும் சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணம் அவர் உள்ளத்தில் தோன்றியது. 1952 ஆம் ஆண்டு சாய்ந்தமருது மழ் ஹருஸ் ஸம்ஸ் மகா வித்தியாலயத்தை ஆரம்பித்து அதன் முதல்அதிபராக கடமையாற்றினார்.

சாய்ந்தமருது தென்பகுதி மக்களின் கல்விக்கு வித்திட்டதோடு கல்வி வளர்ச்சியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தினார் .சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஸம்ஸ் மகாவித்தியாலயத்தில் அவர் அதிபராக இருந்த காலம் வித்தியாலயத்தின் பொற்காலம் ஆகும் என்று போற்றப்படுகிறது .இவருடைய சேவையின் நீண்ட காலத்தை பாடசாலையின் வளர்ச்சிக்காகவே செலவிட்டிருந்தார்.ஓய்வு பெறும் போதும் இவ் வித்தியாலயத்தின் அதிபர் ஆகவே அவர் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது .



13 ஆம் கொளணிஅ.மு.க. வித்தியாலயம் , குருநாகல் பக்மிகொல்ல அல் - மினா மகா வித்தியாலயம் , சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயம் , அக்கரைப்பற்று அல்ஹிதாயா வித்தியாலயம் , சாய்ந்தமருது அ.மு.க. வித்தியாவயம் , கல்முனை ஸாஹிராக் கல்லூரி , அக்கரைப்பற்று ஆயிஷா மகளிர் கல்லூரி போன்ற பாடசாலைகளிலும் இவர் சேவையாற்றியுள்ளார்..

1953 ஆம்ஆண்டில் இலங்கை இஸ்லாமிய சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. அதன் நிர்வாக சபை உறுப்பினராகவும் , கிழக்கு மாகாணக் கிளை , கல்முனை மாவட்டகிளை என்பவற்றின் செயலாளராகவும் , தாய் சங்கத்தின் பொருளாளராகவும் இருந்து அவர்ஆற்றிய மகத்தான சேவையை மறக்க முடியாது.மூன்றுமொழிகளிலும் பாண்டித்தியம் பெற்ற இவர் நாட்டின் நாலா புறமும் சிதறுண்டு போயிருந்த முஸ்லிம் ஆசிரியர்களை ஒன்று திரட்டுவதில் அவர் பெரிதும் பாடுபட்டார்.இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தில் சுமார் 10 ஆயிரம் ஆசிரியர்களை இரணத்துக் கொள்வதற்கு இவர்எடுத்துக்கொண்ட பெரு முயற்சியே காரணமாகும்.

சாய்ந்தமருது -மாளிகைக்காடு ஜூம் மாபெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர்களுள் ஒருவராகவும் அதன் உப செயலாளராகவும் இருந்து திறம்பட செயல்பட்டார். புதிய கட்டிட நிதி பராமரிப்புமுறைகள் பற்றியும் இவர் சொன்ன காத்திரமான கருத்துக்கள் இன்னும் மீட்டப்பட்டுக்கொண்டே இருக்கின்றது

.நெறிப்படுத்தப்பட்டகுர்ஆன் பாடசாலைகள் அமைப்பு , இஸ்லாமிய பழக்க வழக்கங்களுடனான பாலர் பாடசாலை அமைப்புக்கள் , என்பவற்றை உருவாக்குவதற்காக அறிஞர் பெருமக்களுடன் ஆலோசனை நடத்தி வந்தார்

சாய்ந்தமருது - மாளிகைக்காடு பிரதேசத்தில் சமகாலத்தில் வாழ்ந்து மறைந்தவர்களுள் மர்ஹூம் ஏ.ஸி.எம்.இப்ஹாஹிம் ஒரு காத்திரமான பாத்திரமாகவே திகழ்ந்தார்.

## கடன்பட்டார் அடங்கியே போவர்,

# இனவாதத்தின் அறுவடையை சுமக்கும் இலங்கை அரசாங்கத்தின் இன்றைய அவலநிலையும் தோல்வி முகமும்

'கடன்பட்டான் நெஞ்சன் போலே கலங்கினானே இலங்கை வேந்தன்' என்றொரு வாசகம் கம்பராமாயாணத்தில் உள்ளது. அதாவது இராமனை எதிர்த்து யுத்தம் செய்த இராவணன் தன் படைபலம் உறவுப்பலம் எல்லாம் இழந்து நிற்கின்ற நிர்க்கதி நிலையை,கம்பர்கடன்பட்டான் நெஞ்சன் என்று வருணித்தார். ஆனால் இன்றைய இலங்கை சனாதிபதி படைகள்,சகோதரர் பலங்கள் இருந்தும் ஆட்சிக்கு வந்து இரண்டரை வருடங்களுக்குள் கலங்கியும் குழம்பியும் நிற்கின்றார்.காரணம் கொவிட் என்று மட்டும் சொல்ல முடியாது.கணிதப் பார்வையில் சொன்னால் கொவிட் என்பது உலகத்திற்குப் பொதுக்காரணி ஆகும்.இலங்கை அரசுக்கு இந்த நிலை ஏற்படக் காரணம்,இந்த அரசாங்கமே ஆகும். யுத்தத்தில் எப்படியாவது வெற்றி பெற வேண்டும் என்பதற்காகப் பெற்ற கடன்கள் வட்டியும் முதலுமாக இந்த அரசாங்கத்தின்கழுத்தை இறுக்கியுள்ளது.மேலும் நமது சிறிய நாட்டால் தாங்க முடியாதளவுக்கு படையினர் பொலிசார்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.அப்படைத் துறைக்கான பாதுகாப்புச் செலவுகளும் அதிகரித்துள்ளன.இந்த அரசாங்கம் 2019 இல் பொறுப்பேற்றதும் செல்வந்த வர்க்கத்திடம் இருந்து பெற்ற வரிகளுக்குக் கணிசமாக விலக்களிப்பு செயதுள்ளது. இதனால் அரசுக்குக் கிடைக்க வேண்டிய பல்லாயிரக் கணக்கான கோடி ரூபாய்கள் இழக்கப்பட்டுள்ளன. மேலும் சீனி இறக்குமதியின் போது ஒரு கிலோவுக்கான ஐம்பது ரூபாயாக இருந்த வரியினை 25 சதமாக மாற்றியதால் அரசுக்குக் கிடைக்க வேண்டிய ஆயிரத்துக்கும் அதிகமான கோடி ரூபாய்கள் இழக்கப்பட்டுள்ளன. மேலும் பல இறக்குமதிப்பொருட்கள் தடை செய்யப்பட்டதால் அப்பொருட்களால் அரசுக்கு கிடைக்கக் கூடிய பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய்,டொலர் வரிகள் இழக்கப்பட்டுள்ளன.பரஸ்பரம் கொடுக்கல் வாங்கல் என்ற அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதி இறக்குமதிகளில் இறக்குமதியைக் கட்டுப்படுத்தும் போது ஏற்றுமதியால் நன்மை அடைந்த நாடுகள்,எமது ஏற்றுமதிப் பொருட்களைத் தடை செய்வதற்கும் வாய்ப்புள்ளது. இவ்வாறெல்லாம் நெருக்கடிகள் உள்ள போது பசுமைப்புரட்சி என்ற பெயரில் இரசாயன வளமாக்கிகளைத் திடுதிப்பெனத் தடை செய்ததால் விவசாய உற்பத்தி குறிப்பாக நெல்லுற்பத்தியானது விவசாயிகளின் கருத்துப்படி 70 வீதத்தால் குறைவடைந்துள்ளது. இதனால் அரிசியின் நிரம்பல் குறைவடைய அதன் கேள்வி அதிகரிக்க விலை இரட்டிப்புக்கு மேலாக அதிகரித்துள்ளது. இதனால் விவசாயம் தவிர்ந்த ஏனைய தொழில் செய்வோர் அரிசியின் அபரிமிதமான விலை அதிகரிப்பால் அதனைக் கொள்வனவு செய்ய முடியாமல் திணறுகின்றனர்.அதேவேளை உள்நாட்டு அரிசி உற்பத்தியைக் குறைத்துவிட்டு வெளிநாடுகளில் இருந்து அரிசியினை இறக்குமதி செய்வதால் மேலும் டொலர்களைச் இழக்க வேண்டியுள்ளது.இதனால் அதிகார வர்க்கத்தினர் தரகுப்பணம் உழைக்கவும் வாய்ப்புள்ளது.இந்த நிலையில் வருவாய் குறைந்தவர்களுக்கு அரசு நிவாரணம் வழங்க வேண்டியுள்ளது. இதனாலும் அரசுக்கு நிதி இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. கடன்பட்டுச் செய்கின்ற அபிவிருத்திகளிலும் கையூட்டுகள், மோசடிகள் தாராளமாக நடைபெறுகின்றன.மேலும்,மக்கள் வாழ்வாதாரம் அற்ற நிலையில் தவிக்கின்ற போது ஏற்கனவே அமைக்கப்பட்ட வீதிகளுக்கு மேலாகவும் வீதிகள் அமைக்கப்படுகின்றன.மக்கள் பசி பட்டினியால் வாடுகின்ற போது மக்களுக்கு நிவாரணம் அளிப்பதா? அதை விட்டு வீதிகள் அமைப்பதா? விமானம் கொள்வனவு செய்வதா? என்ற வினாக்களுக்கு பகுத்தறிவுள்ள பதில் நிவாரணமாக அமையும். ஆனால் வருவாய் ஈட்டும் பதில் அபிவிருத்தியாகவே அமையும். கடன்படுவதில் வல்லமையுள்ள இந்த அரசாங்கத்தால் பொருளாதாரம் பலவீனமடைந்துள்ளது. அதேவேளை அரசாங்கம் பண நோட்டுகளை, அச்சிடுவதிலும் சாதனை படைத்துள்ளது.இதனால் என்றுமில்லாதவாறு பணவீக்கம் ஏற்பட்டுள்ளது.ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி அடைந்துள்ளது இன்று ஓர் அமெரிக்க டொலரின் பெறுமதி 300 ரூபாவாக உள்ளது.இதனால் இறக்குமதிப்பொருட்களின் விலை மிகையாக அதிகரித்துள்ளது.அது மட்டுமல்லாமல் எமது ரூபாவின் பெறுமதி குறைந்துள்ளதால் பொருட்களின் விலைவாசி நாளுக்கு நாள் அதிகரிக்கின்றன.இதனால் பொருட்கள் பதுக்கப்படுகின்றன. இன்று விற்பதை நாளை விற்றால் அதிகம் வருவாய் கிடைக்கும் என வர்த்தகர்கள் இலாபமூளைகளால் சிந்திக்கின்றார்கள்.இதனால் நுகர்வோர்கள் அதிகம் பாதிக்கப்படுகின்றார்கள். அதேவேளை, பொருட்கள் தட்டுப்பாடாகவுள்ளன. விலைகளுக்கு எந்தக் கட்டுப்பாடும் இல்லை. நாளுக்கொருவிலை.ஆளுக்கொருவிலை என்ற அகராதி இந்த அரசாங்க காலத்தில் தாராளமாக நடைபெறுகிறது.கறுப்புச் சந்தை, கறுப்புப் பணம்,கறுப்பு வியாபாரம் அதிகரித்துள்ளன.அண்மையில் திடீரென் சீமேந்தின் விலை ரூபா 1550 இல் இருந்து ரூபாய் 1850 ஆக அதிகரிக்கப்பட்டது. அன்றைய நாள் மட்டக்களப்பில் ஒரு கடையில் விலை கேட்ட போது அவர் ரூபாய் 2150 என்றார்,அடுத்தவர் ரூபா 1950 என்றார்.அங்கு அதிகரித்த விலையை விட மேலதிகமாக ரூபாய் 2000 கொடுத்து 20 பைகளைக் கொள்வனவு செய்ய வேண்டி இருந்தது .





ஜி.ஸ்ரீநேசன்,
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், மட்டக்களப்பு

இன்று இந்த அரசாங்கம் எதை எதையெல்லாம் செய்ய மறுத்ததோ அதை அதையெல்லாம் செய்ய வேண்டிய நிலைக்கு அழுத்தப்பட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் பெற மாட்டேன் என்றது இப்போது பெறுவதற்கு ஆர்வமாகவுள்ளது. இதனை முன்கூட்டியே பெற்றிருந்தால் கடன்களை மீளச் செலுத்தியாவது ரூபாவின் பெறுமதியை வீழ்ச்சியடையாமல் டொலரிக்கு நிகராக ரூபாய் 200 லாவது பேணியிருக்கலாம்.

மிகையாக நாணயங்களை அச்சடிக்க வேண்டியிருந்திருக்காது. பணவீக்கத்தினைக் கட்டுப்படுத்தி இருக்கலாம். விலைவாசி உயர்வுகளைக் கட்டுப்படுத்தி இருக்கலாம். கொழும்புத்துறைமுக முனையத்தை இந்தியாவுக்கு வழங்கமாட்டேன் என்று அடம்பிடித்த இந்த அரசாங்கம் இந்தியாவிடம் பெற்ற கடனை தவணைக்கு முன்பாகவே முகத்தில் வீசுவது போல் திருப்பிக் கொடுத்தது.அப்பணம் கூட சீனாவிடம் பெற்ற மேலதிகத் தடன் என்று கூறப்பட்டது.இப்போது அதே இந்தியாவிடம் 3.4 பில்லியன் டொலர்களை இந்த பொதுசனப் பெரமுன அரசாங்கம் வேண்டிருக்கின்றது. ஒரு பகுதியைப் பெற்றுமுள்ளது.

> பேரின அடிப்படைவாத்த்தினை அரசியல் இலாபத்திற்காகப் பயன்டுத்தியதன் விளைவு.நாடு சமூக பொருளாதார அரசியல் ரீதியாக தோல்வியடைந்திருக்கின்றது என்பதே வெளிப்படை உண்மையாகும்.ஆனால் நாடும் மக்களும் பின்னடைவை சந்தித்தாலும் ஆளும் அதிகார வர்க்கத்தினரின் வீடுகளும் வியாபாரங்களும் நன்கு செழித்தோங்கி வளச்சி கண்டுள்ளன. ஒரு நாள் தேர்தலில் மக்கள் சாராயம் சாப்பாடுகள் சன்மானங்களுக்கு ஏமாற்றப்பட்டால்,ஐந்து வருடத் தண்டனைகளை மக்கள் அனுபவிக்க வேண்டும் என்பதை எப்போதுதான் மக்கள் அறியப்போகின்றார்கள்? இலங்கை சுதந்திரமடைந்தில் இருந்து 74 ஆண்டுகளாக நாடு அபிவிருத்தி அடையவில்லை என்பதுதான் உண்மை.

கொழும்புத் துறைமுக முனையம், திருகோணமலை பெற்றோலிய சுத்திகரிப்பு நிலையம் என்பவற்றை இந்தியாவுக்கு வழங்கியுள்ளது. அமெரிக்காவுடன் எம்சிசி ஒப்பந்தம் செய்ய மறுத்த இந்த அரசாங்கம் கரவலப்பிட்டிய யுகதனவிய மீள் பிறப்பாக்கல் சக்தித் திட்ட முதலீட்டுக்கு அமெரித்தாவுக்கு இடமளித்து விட்டது. புலம் பெயர்ந்த தமிழ் டயஸ்போராக்களை புலிகளாகப் பார்த்து தடைகளை விதித்த இந் அரசாங்கம் தடைகளை நீக்குவதாக்கூறி டொலர் முதலீடுகளுக்காக கெஞ்சி நிற்கின்றது.இதைவிட ஜிஎஸ்பி வரிச்சலுகையினை தொடர்ந்தும் வழங்குமாறும் மேற்குலக நாடுகளை இலங்கை அரசாங்கம் கெஞ்சுகின்றது.

இலங்கை இராணுவத்தில் யுத்த காலப்பகுதியில் 20 ஆண்டுகள் பணியாற்றிய படச்சிப்பாய் ஒருவர் அண்மையில் ஒரு கருத்தினை சமூக வலைத்தளத்தில் சிங்கள மொழியில் பதிவு செய்துள்ளார். 'இந்த நாட்டை மீட்பதற்காக 20 ஆண்டுகள் யுத்தம் செய்தேன்,இப்போது என்ன நடக்கிறது,நாடு பகுதி பகுதியாக வெளிநாடுகளுக்கு விற்கப்படுகிறது. இதைவிட பிரபாகரனிடம் வடக்கு கிழக்கை ஒப்படைத்திருக்கலாம். அவர் அதனை அபிவிருத்தி செய்திருப்பார்.அவரிடம் இருந்து கடன் பெற்றாவது நமது நாட்டை அபிவிருத்தி செய்திருக்கலாம்' என்று குறிப்பிட்டிருந்தார்.சிங்களச் சிப்பாய் கூறிய கருத்து ஆழமாக நோக்கத்தக்கதாகும்.அதாவது அயல் நாட்டவர்களுக்கு யுத்தத்திற்காகப் பெற்றற கடன்களுக்காக நாட்டைத் துண்டுதுண்டாக விற்று இறைமையை இழப்பதை விட, சொந்த நாட்டவர்களிடம் உரிமைகளைப் பகிர்ந்து கொண்டு பரஸ்பர ஒற்றுமையோடு உதவிகளைப் பெற்று வாழ்ந்திருக்க முடியும் என்பதே அக்கருத்தின் அர்த்தமாகும்.

பேரின அடிப்படைவாத்த்தினை அரசியல் இலாபத்திற்காகப் பயன்டுத்தியதன் விளைவு,நாடு சமூக பொருளாதார அரசியல் ரீதியாக தோல்வியடைந்திருக்கின்றது என்பதே வெளிப்படை உண்மையாகும்.ஆனால் நாடும் மக்களும் பின்னடைவை சந்தித்தாலும் ஆளும் அதிகார வர்க்கத்தினரின் வீடுகளும் வியாபாரங்களும் நன்கு செழித்தோங்கி வளச்சி கண்டுள்ளன.ஒரு நாள் தேர்தலில் மக்கள் சாராயம் சாப்பாடுகள் சன்மானங்களுக்கு ஏமாற்றப்பட்டால்,ஐந்து வருடத் தண்டனைகளை மக்கள் அனுபவிக்க வேண்டும் என்பதை எப்போது தான் மக்கள் அறியப்போகின்றார்கள்? இலங்கை சுதந்திரமடைந்தில் இருந்து 74 ஆண்டுகளாக நாடு அபிவிருத்தி அடையவில்லை என்பதுதான் உண்மை. ஆனால் நமது அரசாங்கங்கள் தாராளாமாகக் கடன்களைப் பெற்று நாட்டைக்கடன்பொறிக்குள் சிக்கவைத்துள்ளன.கடன்பட்டார் அடங்கிநயே போவர்.

இலங்கை அரசாங்கத்தின் இன்றைய அவலநிலையையும் தோல்வி முகத்தையும் இப்போது எம்மால் பார்க்க முடிகிறது.உள்நாட்டு யுத்தத்தை வென்றது என்பது கண்களை விற்று ஓவியத்தை வாங்கிய கதையாகவுள்ளது.இப்போதாவது நியாயமான அரசியல்தீர்வினை முன்வைப்பதன் மூலமாக புலம்பெயர்ந்தத புத்திஜீவிகளையும் முதலீட்டார்களையும் இந்த அரசாங்கம் பயன்படுத்துமா? என்பதுதான் ஆதங்கம் ஆர்வம் மிக்க கேள்வியாகும்.



# திருமலை அருள்மிகு திருக்கோணேசப் பெருமானின் மகோற்சவத்தின் தேர் உற்சவம்











**(பொன்ஆனந்தம் )**

திருகோணமலை அருள்மிகு திருக்கோணேசப்பெருமானின் மகோற்சவத்தின் தேர் உற்சவம் நேற்றுக் காலை 8.00மணியளவில் மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்களுடன் நடைபெற்றது.

மாதுமையம்பாள் சமேத திருக்கோணேஸ்வரப் பெருமான், மாதுமைஅம்பாள், பிள்ளையார், முருகன் என தனித்தனியாக 4தேர்களில் சுவாமிகள் வலம் வந்து அடியார்களுக்கு அருள் பாலித்தனர்.

ஊரடங்கச்சட்டம் அமுலில் இருந்த போதும் விசேட அனுமதியை ஆலய நிர்வாகம் பொலிஸாரிடம் பெற்ற நிலையில் ஆலயத்தின் வாகனத்தில் பொதுமக்கள் ஏற்றி இறக்கப்பட்டனர்.

ஆயினும் 200இற்கும் அதிகமான பக்கத்தர்கள் நிகழ்வில் பங்கு கொண்டனர். இங்கு மாதுமை சமேதராக பெருமாள் வலம்வருவதனையும், பக்தர்கள் வடம் பிடித்து இழுப்பதனையும் வசந்தமண்டபத்தில் பெருமாள் புறப்படமுன்னர் எழுந்தருளி இருப்பதையும் படங்களில் காண்க

---













**தெட்சண கைலாயம் திருக்கோணேஸ்வர ஆலய வருடாந்த உற்சவத்தின் 18 ம் நாள் தீர்த்த உற்சவம் நேற்று (04) காலை பாவநாச தீர்த்தக் கரையில் இடம் பெற்றது.**

**(படங்கள் - அ . அச்சுதன்)**

Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
Tel : 044 2410241
Fax : 044 2410245
sikaramgmbh@gmail.com / www.sikaram.com

Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich.
NAT:076 565 64 57

# கிழக்கு மாகாணத்தின் முதலாவது புற்தரையுடன் கூடிய கோட்டமுனை விளையாட்டு மைதானம் திறந்துவைப்பு!!















(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சத்துருக்கொண்டான் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள கிழக்கு மாகாணத்தின் முதலாவது புற்தரை கிறிக்கெட் மைதானமான கோட்டமுனை கிராமம் நேற்று (04) திகதி உத்தியோகபூர்வமாக திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருத்தினர்களாக இலங்கையின் தேசிய கிறிக்கட் அணியின் முன்னால் தலைவரான அருஜுண ரணதுங்க மற்றும் மட்டக்களப்பு மாவட்ட செயலாளரும் மாவட்ட அரசாங்க அதிபருமான கே.கருணாகரன் அவர்களும் கலந்து சிறப்பித்ததுடன், குறித்த விளையாட்டு மைதானத்தினையும் திறந்துவைத்திருந்தனர்.

பாரம்பரிய மங்கள வாத்தியங்கள் முளங்க மலர் மாலைகள் அணிவித்து அதிதிகள் வரவேற்கப்பட்டதனைத் தொடர்ந்து மங்கள விளக்கேற்றலுடன் பிரதான நிகழ்வுகள் ஆரம்பமாகியிருந்தது.

கிழக்கு மாகாணத்தில் தொழிற்தகமையுடன் கூடிய கிறிக்கட் வீரர் ஒருவரையேனும் உருவாக்கும் நோக்குடன் கூடிய உயரிய சிந்தனையில் புலம்பெயர் உறவுகளின் 200 மில்லியன் நிதிப்பங்களிப்புடன் குறித்த கோட்டமுனை கிராம புற்தரையுடன் கூடிய விளையாட்டு மைதானம் உருவாக்கப்பட்டுள்ளது. கோட்டமுனை விளையாட்டுக் கிராம தலைவர் இ.சிவநாதன் தலைமையில் நடைபெற்ற குறித்த விளையாட்டு கிராமத்தின் திறப்பு விழா நிகழ்வின் போது கோட்டமுனை விளையாட்டுக் கழகத்தின் ஆரம்பகால உறுப்பினரும் ஸ்தாபக தலைவருமான பு.வசீகரன் உள்ளிட்டு விளையாட்டு கிராமத்திற்காக முன்னின்று உழைத்தோருக்கு பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வை முன்னிட்டு இருபதிற்க்கு இருபது ஓவர்கள் கொண்ட கண்காட்சி கிரிக்கட் போட்டி ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

1996 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை வென்ற இலங்கை கிரிக்கட் அணியில் இடம் பெற்ற பல வீரர்கள் அர்ஜுன ரணதுங்க தலைமையிலான அணியுடன், உள்ளூர் வீரர்கள் ஒன்றிணைந்த மட்டக்களப்பு நாயகர்கள் எனும் அணியினருக்கு இடையில் இந்தப் போட்டி நடைபெற்றது.

எமது கிரிக்கெட் விளையாட்டை சர்வதேச தரத்திற்கு எடுத்துச் செல்லும் பாரிய முயற்சியில் ஒரு முக்கியமான மைல்கல்லாக இந்த மைதானம் காணப்படுவதாக இதன்போது தெரிவிக்கப்பட்டது.





# ஈழமதி ஜப்பார் எழுதிய மதி பாடும் நதிகள் கவிதை நூல் அரசாங்க அதிபர் கருணாகரனிடம் கையளிப்பு



(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

கிழக்கிலங்கையின் பிரசித்தி பெற்ற எழுத்தாளர் ஈழமதி ஜப்பார் எழுதிய மதிபாடும் நதிகள் எனும் கவிதை நூல் மட்டக்களப்பு மாவட்ட அராசங்க அதிபர் கே. கருணாகரனிடம் நூலாசிரியரால் அண்மையில் கையளிக்கப்பட்டது.

பீ.எம்.கே. றஹ்மதுல்லா எனும் இயற்பெயருடைய இவர் எழுதிய இந்நூலில் கிழக்கிலங்கை மற்றும் கல்விப் புலமை மிக்கவர்களின் வரலாறுகள் என்பன கவிதைகளாக வடிக்கப்பட்டுள்ளன.

1959 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 28ஆந் திகதி பிறந்த ஈழமதி ஜப்பார் 1978 ஆம் ஆண்டு தொடக்கம் தினகரன், டெய்லிநியூஸ் பத்திரிகைகளின் நிருபராக எழுத்துத் துறைக்குள் பிரவேசித்தார். கட்டுரைகள், நாடகம், கவிதை என இவரது இலக்கியப் படைப்புக்கள் பத்திரிகை, வானொலி மற்றும் பிரசுரங்களில் தொடர்ச்சியாக வெளிவந்தன.

அட்டாளைச்சேனை அல்ஹிதாயா வித்தியாலயத்தில் ஆரம்பக்கல்வியினையும், அல்அஸ்ரப் வித்தியாலயத்தில் இடைநிலைக் கல்வியினையும் கற்றார். பாடசாலைக் காலத்திலேயே கவிதைத்துறை, எழுத்துத் துறையில் ஆர்வமுள்ள இவர் மாவட்டமட்டம், மாகாணமட்டங்களில் பல பரிசில்களையும் விருதுகளையும் பெற்றுள்ளார்.

நான்கு பிள்ளைகளின் தந்தையான இவர் ஒரு அரச பணியாளர். பிரதேச செயலகத்தில் சுமார் 34 வருடங்கள் சேவையாற்றி, 2017 இல் அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

மும்மொழியிலும் தேற்சி பெற்ற இவர் மொழி பெயர்ப்பாளராகவும் செயற்பட்டதுடன், சுமார் 17 வருடங்கள் அமைச்சரின் பிரத்தியேக உதவியாளராக பாலமுனை, அக்கரைப்பற்று, அம்பாறை, ஒலுவில், அட்டளைச்சேனை பகுதிகளில் சமூகப் பணிகளில் ஈடுபட்டுவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# மடத்தடி புராதன சிவன் ஆலயம்

## - ஒரு பார்வை

மடத்தடி மாட்டுப்பளையிலுள்ள மிகவும் பழைமை வாய்ந்த சிவன் ஆலயம் இன்று தூர்ந்து அழிவடைந்து காணப்படுகிறது.இது மீனாட்சி அம்மன் ஆலயத்திற்கு மேற்காக உள்ளது.

இதனை இவ்வாலயத்திற்கு விஜயம் செய்கின்ற வரலாற்றாய்வாளர்கள் பலரும் ஆய்வுசெய்துள்ளனர். முன்னாள் தலைவர் கோ.கமலநாதன் இருந்த காலை அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் ஆலயஆலோசகர் வி.ரி.சகாதேவராஜா இந்துகலாசாரஅலுவலர் கு.ஜெயராஜி உபதலைவர் கி.ஜெயசிறில் சமுகசெயற்பாட்டாளர் ராஜன் உள்ளிட்டோர் விஜயம்செய்து பார்வையிட்டிருந்தனர்.

காடுமண்டிக்கிடந்த அவ்வாலயத்தை இன்றையதலைவர் கி.ஜெயசிறில் தலைமையிலான புதிய நிருவாகம் சுத்தப்படுத்தி அங்கு சிவலிங்கம் ஒன்றை பிரதிஸ்டை செய்துவைக்க ஏற்பாடு செய்துள்ளது.அதற்கான பீடம் அமைப்பு பணிகள் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ்வாலயத்தின் தோற்றம் சோழர்காலத்திற்குரியது என வரலாற்றாய்வாளர்கள் கூறியுள்ளனர். குறிப்பாக சோழர் இலங்கையில் பொலநறுவையை மையமாகக்கொண்டு 52ஆண்டுகள் ஆட்சிசெய்த காலத்தில் இவ்வாலயம் அமைக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

எனவே முதலில் சோழர்களின் பொலநறுவை ஆட்சி பற்றி அறிந்திருப்பது நல்லது.

### சோழர்களின் பொலநறுவை ஆட்சி

பொலன்னறுவை இராச்சியம் அல்லது பொலன்னறுவை இராசதானி என்பது அனுராதபுர இராச்சியம் சோழர்களால் கைப்பற்றப்பட்ட பின்னர் அவர்களால் இலங்கையில் உருவாக்கப்பட்ட இராச்சியம்.

கிபி 1017- கிபி 1236 காலகட்டத்திற்குரிய இக்காலத்தை முதலில் மும்முடிச் சோழ மண்டலம் என அழைக்கப்பட்டது. இலங்கை நீர்வள நாகரிகத்தின் பொற்காலமாக இதனைக் குறிப்பிடலாம்.

அநுராதபுர காலத்தின் போது பொலன்னறுவை புகழ் வாய்ந்த நகரமாகக் காணப்பட்டது. ஐந்தாம் மகிந்தன் அனுராதபுர இராசதானியை ஆட்சி செய்த போது இராசேந்திர சோழன் என்ற சோழ மன்னனால் இராசரட்டை கைப்பற்றப்பட்டது. பின் அப்பகுதி சோழப்பேரரசின் பகுதியாகியதுடன் அது ˜மும்முடிச் சோழ மண்டலம்˜ எனப் பெயரிடப்பட்டது.



பின்னர் இராசேந்திர சோழனால் உருகுணையில் ஐந்தாம் மகிந்தன் பிடிபட்டு சோழ நாட்டிற்கு கைதியாக கொண்டு செல்லப்பட்டான். சோழர்களால் மகாவலி கங்கையால் சூழப்பட்ட பொலன்னறுவை தலைநகரமாக தெரிவு செய்யப்பட்டது. பொலன்னறுவை சோழர்களால் ஜனநாதபுரம் என்று அழைக்கப்பட்டது.

சோழர்கள் 52 ஆண்டுகள் இங்கு ஆட்சி செய்தார்கள். சோழர்களை தோற்கடித்த முதலாம் விஜயபாகு பொலன்னறுவையின் முதலாவது சிங்கள மன்னனாவான். இவன் விகாரைகள் பலவற்றை அமைத்தான். இவ்வரசன் பாண்டியர்களோடு திருமண ஒப்பந்தங்களைச் செய்தான்.

முதலாம் பராக்கிரமபாகு (கி.பி.1153 தொடக்கம் கி.பி.1186) பொலன்னறுவையின் முதன்மையான ஆட்சியாளன் ஆவான். பராக்கிரம சமுத்திரத்தைக் கட்டிய பெருமை இவனையே சாரும்.

முதலாம் பராக்கிரமபாகுவின் பின் நிசங்கமல்லன் ஆட்சி செய்தான். பின்னர் சில பலமற்ற அரசர்களும் அரசிகளும் ஆட்சி செய்தார்கள்.

### வீழ்ச்சி

கலிங்க மாகன் உடைய படையெடுப்புடன் பொலன்னறுவை இராச்சியம் வீழ்ச்சியுற்றது. இவன் கி.பி.1215 இல் பலம்வாய்ந்த ஏறக்குறைய 24000 பேரினைக்கொண்ட கேரளப்படையை கொண்டு இலங்கையை ஆக்கிரமித்தான்.

பௌத்த மதமே பிரதானமான மதமாகும். எனினும் சோழர் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் இந்து மதம் நன்றாகப் பரவியது. பிற்காலத்தில் ஆட்சிக்கு வந்த முதலாம் பராக்கிரமபாகு மன்னன் முதலியோர் பௌத்த மதத்தில் நிலவிய பிரிவினைகளை ஒழித்தனர். இதன் மூலம் பௌத்த மதம் வளர்ச்சியுற்றது.

பொலன்னறுவையிலுள்ள சிவன் கோயில்களுள் ஒன்று மீள்கட்டுமானம் செய்யப்பட்டது.

இதன் பின்னணியிலேயே சோழர்களால் மடத்தடி சிவன் ஆலயம் அமைக்கப்பட்டது.

பிற்காலத்தில் 16ஆம் நூற்றாண்டு காலமுற்;பகுதியில் இலங்கையில் முதலில் ஆக்கிரமித்த ஐரோப்பியர்களான போத்துக்கீசர்கள் கிறிஸ்தவமதவெறிகொண்டு செயற்பட்டதனால் இந்து கோவில்களை அழித்து சேதமாக்கியதை வரலாற்றாய்வார்கள் கூறிநிற்கின்றனர். மண்டூர் முருகனாலயம் திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயம் என்பனவும் போத்துக்கீசரின் கைவரிசைக்கு இலக்கான ஆலயங்களாகும்.

அவ்வழிப்பின் ஓரங்கமாக மடத்தடி சிவன் ஆலயம் தகர்த்து அழிக்கப்பட்டிருக்கலாமென நம்பப்படுகிறது. அதன்பிறகு அவ்வாலயம் கவனிப்பாரற்ற நிலையில் காடுமண்டி பற்றைகள் புதர்கள் வளர்ந்து மறைந்துகாணப்பட்டது.

அவ்வளாகத்தில் நீர்ச்சுனை மற்றும் இராஜநாகம் வாழும் பிரதான பாம்புப்புற்று இருந்தது. ஆக அவையும் ஆலய எச்சங்களும் இன்றும் இருப்பதைக் கண்கூடாகக் காணலாம்.

மடத்தடி மீனாட்சிஅம்மன் ஆலயத்திற்கு மேற்கே வயல்ப்பிரதேசத்தில் சிதைந்துகிடக்கும் இப்புராதன சிவன் ஆலயத்தில் சிவனருள் பவுண்டேசன் துணையுடன் மட்டக்களப்பு ஆதீனம் சிவலிங்கமொன்றை பிரதிஸ்டை செய்யும் புனிதபணியில் ஈடுபட்டுள்ளது.புதிய தலைவர் திரு.கி.ஜெயசிறிலின் வேண்டுகோளின் பேரில் அப்பணி அரங்கேறிவருகிறது.

சிவலிங்கத்திற்கான பிரதிஸ்டை நிகழ்வும் நேற்று(4) நள்ளிரவு இடம்பெற்றது.

அச் சிவலிங்கத்தால் இனிவரும்காலங்களில் தொடர்வழிபாட்டிற்குரிய ஆலயமாக இவ்விடம் திகழும் என்பது கண்கூடு.

**விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா**
**ஆலோசகர் அறங்காவலர்சபை**
**மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலயம்.**

